Lb -79

சர்வதேச
சிறுதானிய ஆண்டு
2023

வேளாண்மை - உழவர்
நலத் (ப.க) துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை-9.

கடித (டி) எண்.115, நாள்: 11.05.2023.

அனுப்புநர்
திரு. சி.சமயமூர்த்தி, இ.ஆ.ப.,
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளர்

பெறுநர்
பதிவாளர்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் – 641 003,

அய்யா,

பொருள்: வேளாண்மை – உழவர் நலத்துறை – 2023 - 2024-ஆம் ஆண்டுக்கான வேளாண்மை நிதி நிலை அறிக்கை அறிவிப்பு எண்.59 – "வட்டாரத்திற்கு ஒரு வேளாண் விஞ்ஞானி பொறுப்பு அலுவலராக நியமனம்" செய்தல் – செயல்முறை அறிவுரைகள் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:
1. 2023-2024-ஆம் ஆண்டுக்கான வேளாண்மை நிதி நிலை அறிக்கையில் மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட "59. வட்டாரத்திற்கு ஒரு வேளாண் விஞ்ஞானி பொறுப்பு அலுவலராக நியமனம்" குறித்த அறிவிப்பு.
2. தங்களது கடித எண்.TNAU/ Agriculture Budget Announcement / 2023, நாள் 27.04.2023.

*****

2023-2024-ஆம் ஆண்டுக்கான வேளாண்மை நிதி நிலை அறிக்கையில், மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் இன்னபிறவற்றுடன், கீழ்க்காணும் அறிவிப்பினை வெளியிட்டார்கள்:-

"59) வட்டாரத்திற்கு ஒரு வேளாண் விஞ்ஞானி பொறுப்பு அலுவலராக நியமனம்

வேளாண், தோட்டக்கலைப் பயிர்களில், புதிதாக வெளியிடப்பட்ட உயர் மகசூல் இரகங்கள், சாகுபடித் தொழில்நுட்பங்கள், பூச்சி நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கான பயிர்ப்பாதுகாப்பு முறைகள், ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை, நவீன இயந்திரங்கள், மதிப்புக்கூட்டி விற்பனை

செய்வதற்கான உத்திகள் போன்ற அனைத்து தகவல்களையும் விஞ்ஞான ரீதியிலான ஆலோசனைகளையும் விவசாயிகளுக்கு நேரடியாக வழங்குவதற்காக, வேளாண் கல்லூரிகள், வேளாண் ஆராய்ச்சி நிலையங்கள் அல்லது வேளாண் அறிவியல் நிலையங்களிலிருந்து ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ஒரு வேளாண் விஞ்ஞானி பொறுப்பு அலுவலராக நியமிக்கப்படுவார்."

2. மேற்காணும் அறிவிப்பின் அடிப்படையில், பார்வை இரண்டில் காணும் தங்களது கடிதத்தில் அனுப்பப்பட்ட கருத்துரு அரசால் ஆய்வு செய்யப்பட்டு, ஏற்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்நிகழ்வில், வேளாண்மை தொடர்பான அனைத்து தகவல்களையும், விஞ்ஞான ரீதியிலான ஆலோசனைகளையும் வட்டாரத்தில் உள்ள விவசாயிகளுக்கு நேரடியாக வழங்குவதற்காக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் அருகாமையில் உள்ள வேளாண் கல்லூரிகள், வேளாண் ஆராய்ச்சி நிலையங்கள், வேளாண் அறிவியல் நிலையங்களிலிருந்து ஒரு வேளாண் விஞ்ஞானியை ஒவ்வொரு வட்டாரத்திற்கும், பொறுப்பு அலுவலராக பணியமர்த்துவதற்கு அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

3. மேலும், கீழ்க்கண்ட அறிவுரைகளைப் பின்பற்றுமாறு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக பதிவாளர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்:-

(i) இவ்விஞ்ஞானிகள் வேளாண், தோட்டக்கலைப் பயிர்களில், புதிதாக வெளியிடப்பட்ட உயர் மகசூல் இரகங்கள், சாகுபடித் தொழில்நுட்பங்கள், பூச்சி நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கான பயிர்ப்பாதுகாப்பு முறைகள், ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை, நவீன இயந்திரங்கள், மதிப்புக்கூட்டி விற்பனை செய்வதற்கான உத்திகள் போன்ற அனைத்து தகவல்களையும் விஞ்ஞான ரீதியிலான ஆலோசனைகளையும் விவசாயிகளுக்கு நேரடியாக வழங்க வேண்டும். மேலும், இவ்வட்டார வேளாண் விஞ்ஞானிகள் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளையும் மேற்கொள்ள வேண்டும்:

(ii) இத்திட்டம் தொடர்பான விபரங்களையும், வட்டார வாரியாக நியமிக்கப்பட்டுள்ள வேளாண் விஞ்ஞானிகள் குறித்த முழு விபரங்களையும் வேளாண்மை – உழவர் நலத் துறைத் தலைவர்கள், மாவட்ட ஆட்சியர்கள், மாவட்ட வேளாண்மை

இணை இயக்குநர்கள், தோட்டக்கலை இணை இயக்குநர்கள், தோட்டக்கலை துணை இயக்குநர்கள், செயற்பொறியாளர்கள் (வேளாண்மைப் பொறியியல்), வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை துணை இயக்குநர்களுக்கு உடனடியாக தெரிவிக்க வேண்டும்;

(iii) எதிர்வரும் காலங்களில், விஞ்ஞானிகள் பணி மாற்றப்படும் நிகழ்வில், உடனடியாக மாற்று விஞ்ஞானியை நியமித்து, அதுகுறித்த விவரங்களையும் மேற்காணும் அலுவலர்களுக்கு தெரிவிக்க வேண்டும்;

(iv) வட்டார வாரியாக நியமிக்கப்படும் வேளாண் விஞ்ஞானிகளின் பெயர், பதவி, கைபேசி எண் உள்ளிட்ட விபரங்களை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும்;

4. இச்செயல்முறை அறிவுரைகளின் அடிப்படையில் தொடர் நடவடிக்கையினை மேற்கொண்டு அந்நடவடிக்கைகள் குறித்த அறிக்கையை அரசுக்கு அனுப்புமாறும் தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

தங்கள் நம்பிக்கையுள்ள,

அ.சா. சேதுராமன் [signature] 11/05/2023

வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும்
அரசுச் செயலாளருக்காக.
[signature] 11/5/2023

நகல்:-

மாண்புமிகு வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
முதன்மைச் செயலாளர் / ஆணையர், சர்க்கரைத்துறை, சென்னை-35.
இயக்குநர், வேளாண்மைத் துறை, சேப்பாக்கம், சென்னை-5.
இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, சேப்பாக்கம், சென்னை-5.
இயக்குநர், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை, சென்னை-32.
செயல் இயக்குநர், தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை, சென்னை-32.
தலைமைப் பொறியாளர் (வே.பொ.), வேளாண்மைப் பொறியியல் துறை, சென்னை-35.
இயக்குநர், விதைச்சான்று மற்றும் அங்ககச் சான்றுத்துறை, சென்னை-32.
உதவி நிரலர், வேளாண்மை – உழவர் நலத் துறை, சென்னை-9.
வேளாண்மை – உழவர் நலத் (வ(ம)தி / அநமு3) துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்கள்.

**இணைப்பு**

**கடித (டி) எண். 115, நாள்: 11.05.2023.**

**வட்டார வேளாண் விஞ்ஞானிகள் மேற்கொள்ள வேண்டிய பணிகள்**

1. ஒவ்வொரு வட்டாரத்திற்கும் நியமிக்கப்படும் வேளாண் விஞ்ஞானி அந்த வட்டாரத்தில் பெய்யும் மழை, மண்ணின் தன்மை, பயிர் சாகுபடி, சென்ற ஆண்டில் பூச்சி, நோய் தாக்கிய விவரம், ஒவ்வொரு பயிரிலும் கிடைக்கும் மகசூல், தற்போதுள்ள விற்பனை வாய்ப்பு, விவசாயிகளுக்கு கிடைக்கும் வருமானம், வட்டார அளவில் உருவாக்கப்பட்டுள்ள பல்வேறு கட்டமைப்பு வசதிகள் போன்ற அடிப்படைப் புள்ளிவிவரங்களை சேகரித்து, அந்த வட்டாரத்தில் இலாபம் தரும் வகையில் மாற்றுப்பயிர்களை உள்ளடக்கி, பயிர் சாகுபடித் திட்டம் ஒன்றை விரிவாக்க அலுவலர்களுடன் இணைந்து தயாரித்து அதற்கேற்ப விவசாயிகளுக்கு அறிவுரை வழங்க வேண்டும்.
2. வேளாண்மை, தோட்டக்கலைப் பயிர்களில் புதிதாக வெளியிடப்பட்ட உயர்மகசூல் இரகங்களைப்பற்றி விவசாயிகளிடம் விளக்கி, புதிய இரகங்களைப் பிரபலப்படுத்த நடவடிக்கை எடுப்பதோடு, இத்தகைய இரகங்களின் விதைகள் கிடைக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
3. டிரோன்கள் மூலம் பயிர் பாதுகாப்பு, நிழல்வலைக்குடில், பசுமைக்குடில் போன்ற பாதுகாக்கப்பட்ட வேளாண் சாகுபடி, வேளாண்மை இயந்திரமயமாக்கல், மண்வள மேம்பாடு, ஒவ்வொரு விளைபொருளிலும் மதிப்புக் கூட்டி விற்பனை செய்தல் ஆகிய இனங்களில் நவீனத் தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு பயிற்சி மூலமாகவும் செயல் விளக்கங்கள் மூலமாகவும் செய்து காண்பிக்க வேண்டும்.
4. வட்டார அளவில் நடைபெறும் விவசாயிகள் பயிற்சி மற்றும் ஆய்வுக் கூட்டங்களில் கலந்து கொண்டு, அவ்வப்போது எழும் களப் பிரச்சினைகளுக்கு தொழில்நுட்ப ரீதியாகத் தீர்வு காண விரிவாக்க அலுவலர்களுக்கு உதவ வேண்டும்.
5. வேளாண் நிதிநிலை அறிக்கையில் அறிவித்தவாறு, கிராமங்களில் உள்ள விவசாயிகளை உள்ளடக்கி உருவாக்கப்படும் Whatsapp குழுவில் வட்டார வேளாண் விஞ்ஞானியும் இணைந்து கொண்டு தொழில் நுட்ப ஆலோசனைகளை அவ்வப்போது வழங்க வேண்டும்.

6. வட்டாரத்தின் எல்லைக்கு உட்பட்ட கிராமங்களில், சாகுபடி செய்யப்படும் வேளாண்மை, தோட்டக்கலைப் பயிர்களில் பூச்சி, நோய் தாக்குதல் அல்லது நுண்ணூட்டச் சத்து குறைபாட்டினாலோ பயிர்பாதிப்பு ஏற்பட்டால், விரிவாக்க அலுவலர்களுடன் இணைந்து, சம்பந்தப்பட்ட கிராமங்களுக்குச் சென்று பயிரை ஆய்வு செய்து, அதற்கு தொழில்நுட்ப ரீதியாக ஆலோசனைகளை வழங்க வேண்டும்.

அ. மாநில அளவில் வேறு ஏதாவது வட்டாரத்தில் புதிய பூச்சி, நோய்த்தாக்குதல்கள் ஏதும் ஏற்பட்டால், அதை முன்கூட்டியே அறிந்து, அத்தாக்குதல் அவர்களுக்குரிய வட்டாரத்தில் ஏற்படாவண்ணம் வட்டார அலுவலர்களையும் விவசாயிகளையும் எச்சரிப்பதோடு தடுப்பு நடவடிக்கைகளையும் பரிந்துரைக்க வேண்டும்.

7. ஒவ்வொரு வேளாண்மை, தோட்டக்கலை விளைபொருட்களிலும் அறுவடைக்குப் பின் மேற்கொள்ள வேண்டிய தரம் பிரித்தல், மதிப்புக் கூட்டுதல் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளித்து அவ்விளைபொருட்களுக்கு இலாபகரமான விலை கிடைக்கும் வகையில் உரிய சந்தை வாய்ப்பினையும் உருவாக்கித் தருவதற்கு உதவ வேண்டும்.

8. வட்டார ஆய்வின் அடிப்படையில் கிடைத்த விவரங்களின்படி. விவசாயிகளின் முக்கிய தொழில்நுட்பத் தேவைகளைப் பட்டியலிட்டு பல்கலைக்கழகத்திற்குத் தெரிவித்து அவற்றை ஆராய்ச்சியில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

சி.சமயமூர்த்தி,
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளர்

//உண்மை நகல்//

11/05/2023

பிரிவு அலுவலர்

11/5/2023